இனிமையான குழந்தைகளே ! பாபா உங்களுக்கு ஞானத்தின் கஸ்தூரியைக் கொடுக்கின்றார் என்றால், பாபாவிடம் நீங்கள் அர்ப்பணம் ஆக வேண்டும். தாய் தந்தையை பின்பற்றி தூய்மையாக்குவதற்கான சேவை செய்ய வேண்டும்.

கேள்வி: அதிர்ஷ்டசாலி குழந்தைகளின் அடையாளம் என்ன?

பதில்: அதிர்ஷ்டசாலி குழந்தைகள் அதாவது பாக்கியசாலி குழந்தைகள் நன்கு படிப்பார்கள், படிக்கவும் வைப்பார்கள். அவர்கள் உறுதியான நிச்சய புத்தி உடையவர்களாக இருப்பார்கள். ஒருபோதும் பாபாவின் கையை விடமாட்டார்கள். தொழில் போன்றவைகளை செய்து கொண்டே வகுப்பும் எடுப்பார்கள். மிகவும் மகிழ்ச்சியில் இருப்பார்கள். யாருடைய அதிர்ஷ்டத்தில் இல்லையோ அவர் களுக்கு லாட்டரி கிடைத்தாலும் இழந்து விடுவார்கள்.

பாடல்: கள்ளம் கபடம் அற்றவர் தனிப்பட்டவர்.....

ஓம் சாந்தி. யார் எதைப்பற்றியும் அறியவில்லையோ அவரை கள்ளம் கபடம் அற்றவர் என்று கூறப்படுகிறது. உண்மையில் மனிதர்களாகிய நாம் எவ்வளவு அப்பாவியாக இருந்தோம். மாயை எவ்வளவு அப்பாவியாக மாற்றியிருக்கின்றது என்பதை குழந்தைகள் அறிந்திருக்கிறார்கள். தந்தை யார் என்பதைக் கூட அறியவில்லை. அப்பா என்று கூறி அழைக்கவும் அறியவில்லை. அப்பாவிட மிருந்து என்ன ஆஸ்தி கிடைக்கிறது என்று கூட தெரியவில்லை என்றால் அப்பாவி என்றும் கூறுவார் கள் இல்லையா!. அப்பாவி, என்றாலும் முட்டாள் என்றாலும் ஒன்றுதான். இச்சமயம் அனைவரும் முட்டாள் ஆகியிருக்கின்றனர். அவர்களுக்கு அறிவற்ற தன்மையின் கர்வம் இருக்கின்றது. குழந்தைகளே நீங்கள் தந்தையை அறிகிறீர்கள். மேலும் அவரிடமிருந்து கேட்டுக் கொண்டும் இருக் கின்றீர்கள். மற்றபடி ஆத்மாவை ஆத்ம உணர்வுடையவராக மாற்றுவதற்கு கடினமாக உழைக்க வேண்டும். ஏ ஆத்மாக்களே! ஆத்ம உணர்வுடையவராகுங்கள், என பாபாவே கற்றுக் கொடுக்கின்றார். தன்னை பரலோகத் தந்தையின் குழந்தைகள் என நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். லௌகீக தந்தையை அறிகிறீர்கள். மற்றபடி நீங்கள் எவ்வளவு அப்பாவியாக இருக்கின்றீர்கள். பரலௌகீக தந்தையை அறியவில்லை. இத்த விஷயங்களை பரம்பிதா பரமாத்மா தான் புரிய வைக்கின்றார் என்பது குழந்தைகளின் புத்தியில் பதிவாகி யிருக்கின்றது. நீங்கள் சிறிய குழந்தைகள் கிடையாது. உங்களுடைய உடல் பெரியதாக இருக்கின்றது. ஒரு வேளை தன்னை தேகம் என நினைத்தால் பாபாவை நினைக்க முடியாது என்று பாபா புரிய வைக்கின்றார். தன்னை ஆத்ம உணர்வுடையவர் என்று புரிந்து கொள்ளுங்கள். குழந்தைகளே! குழந்தைகளே! என்று பாபா சரீரத்திற்குக் கூறவில்லை ஆத்மாவிற்குத்தான் கூறுகிறார். மேலும் குழந்தைகள் ஆத்மாக்கள் அனைவரும் சிவனை (பரமாத்மாவை) அப்பா என்கிறார்கள். எந்த ஒரு ஆத்மாவையோ, பிரம்மத்தையோ கூறவில்லை இவரும் அவருடைய குழந்தை. நம்முடைய எல்லையற்ற தந்தை இவருக்குள் வந்திருக்கின்றார் என நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். எனவே தந்தையை நினைக்க வேண்டும். 84 - ன் சக்கரத்தையும் நினைக்க வேண்டும். இது எல்லையற்ற 5000 வருடத்தின் நாடகம் ஆகும். நீங்கள் நடிகர் ஆவீர்கள். இப்போது உங்களுக்கு நாடகத் தின் முதல் இடை கடை தெரிந்திருக்கின்றது. எனவே முழு சக்கரமும் புத்தியில்

சுழல வேண்டும். உங்களுடைய பெயர் எவ்வளவு புகழ் பெற்றதாக இருக்கின்றது. சுயதர்சன சக்கரதாரி, பிறகு எதிர்காலத்தில் நீங்கள் சக்ரவர்த்தி இராஜா ஆகிறீர்கள். 84 பிறவிகளின் கதை சக்கரத்தில் தெளிவாகிறது. இப்போது நீங்கள் பாபாவினுடையவர் ஆகியிருக்கின்றீர்கள். இதை நினைவில் வைக்க வேண்டும். எவ்வளவு குருடர்களுக்கு ஊன்றுகோலாக மாறுவீர்களோ அவ்வளவு இரக்கமுடையவர் என பாபா புரிந்து கொள்வார். இப்பொழுது நீங்கள் உங்களுடைய கால்களில் நிற்க வேண்டும். சென்டர் அதனுடைய கால்களில் நிற்க வேண்டும் என கூறுவது போல, நீங்களும் உங்களுடைய கால்களில் நிற்க வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்த முயற்சி செய்ய வேண்டும். தாய் தந்தையைப் பின்பற்றுங்கள். லௌகீகத்தில் குழந்தைகள் அப்பாவைப் பின்பற்றி பதீதமாகி விடுகிறார்கள். இதுவோ பாரலௌகீக தந்தைக்காகக் கூறப்படுகிறது. அவருடைய ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். மம்மா பாபாவின் தொழில் என்ன என்று பாருங்கள். பதீதர்களை பாவனம் ஆக்குவது!. மற்ற தர்ம பிதாக்கள் வரும் பொழுது பல தர்மத்தின் (மதங்கள்) ஆத்மாக்கள் மேலிருந்து வருகிறார்கள். அங்கே மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இங்கே மாற்ற வேண்டி இருக்கின்றது சூத்திரர்களை பிராமணர் ஆக்க வேண்டும். இதற்காக நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். நீங்கள் எவ்வளவு புத்தகங்களைக் கொடுக்கின்றீர்கள் அதைப் பார்த்து விட்டு கிழித்து போடுகிறார்கள்.

குழந்தைகளாகிய நீங்கள் ரூப் பசந்த் (ஞானி யோகி) ஆவீர்கள். எப்படி தந்தையோ அப்படியே குழந்தை கள். நீங்கள் ஞான மழை பொழிய வேண்டும். இந்த படங்கள் மிகவும் நன்றாக இருக்கின்றது. திருமூர்த்தியின் படம் எவ்வளவு நன்றாக இருக்கின்றது. இதில் அப்பா மற்றும் ஆஸ்தி இரண்டும் வந்து விடுகின்றது. தந்தை இல்லாமல் தாத்தாவின் ஆஸ்தி எப்படி கிடைக்கும்? கிருஷ்ணரின் சித்திரம் அனைவருக்கும் பிடித்திருக்கின்றது. மற்றபடி 84 பிறவிகளைப் பற்றி எழுதியவை நன்றாக இல்லை. அவர்களுக்கு சித்திரம் நன்றாக இருக்கிறது. உங்களுக்கு விசித்திரம் நன்றாக இருக்கின்றது. ஏனென்றால் உங்களுக்கு ஆத்ம உணர்வுடையவராகுக! என்று பாபா கூறுகின்றார். நீங்கள் உங்களை விசித்திரமானவர் என்று நினைத்தால் விசித்திரமான பரமாத்மாவையே நினைக்கின்றீர்கள். தந்தை படைக்கக்கூடியவர் என்றால், நிச்சயமாக புது உலகத்தைத் தான் படைப்பார் இல்லையா!. அதில் லட்சுமி நாராயணனின் இரஜ்யம் இருந்தது. லட்சுமி நாராயணனின் சித்திரம் கூட உருவாக்கப்பட்டு இருக்கிறது. மேலும் சர்வகுண சம்பன்னர், 16 கலைகளிலும் சம்பூர்ணமானவர்...... என எழுதப்பட்டு இருக்கின்றது. லட்சுமி நாராயணன் மகாராஜா மகாராணி என்பதால் நாம் பாபாவை நினைவு செய்து இவ்வாறு மாறிக் கொண்டு இருக்கின்றோம் என்ற போதை இருக்கின்றது. எனவே எப்பொழுதும் பாபா பாபா என்று கூறிக் கொண்டேயிருங்கள். மேலும் எதிர்காலப் பதவியை நினைத்தால் சத்யுகத்திற்குச் சென்றுவிடலாம். நான் எருமை, நான் எருமை...... எனக் கூறுவதால் எருமையாகவே மாற ஆரம்பித்து விட்டான் என்ற எடுத்துக்காட்டு இருக்கின்றது. ஆனாலும் கூறுவதால் யாரும் மாற முடியாது. ஆத்மாவாகிய நான் நரனிலிருந்து நாராயணராக மாறிக் கொண்டு இருக்கின்றேன் என நீங்கள் அறிகிறீர்கள். இப்பொழுது பிச்சைக்காரனாக இருக்கின்றேன். இது அதிசயமாக இருக்கின்றது. அங்கே ஒருவரே இராஜ்யம் செய்ய மாட்டார்கள். அவர்களுடைய வம்சம் தொடர்கிறது. அவர்களுடைய குழந்தைகள் இருப்பார்கள். 1250 வருடம்

லட்சுமி நாராயணன் மட்டுமே இராஜ்யம் செய்ய முடியாது. சத்யுகத்தின் ஆயுள் நீண்டது. இருப்பினும் பிரஜை வேண்டும் எனக் கூறுகிறார்கள். புத்தியில் அளவற்ற ஞானம் வேண்டும்.

நீங்கள் யார் முன்பு வேண்டுமானாலும் சித்திரத்தை வைத்து பாரதம் சொர்க்கமாக இருந்தது என்று புரிய வையுங்கள். இப்போது பழைய உலகம் நரகமாக இருக்கின்றது. நாம் சொர்க்கவாசியாக இருந்தோம். இப்போது நரகவாசியாக இருக்கின்றோம். மீண்டும் சொர்க்கவாசியாக மாறிக் கொண்டு இருக்கின்றோம். சத்யுகத்தில் லட்சுமி நாராயணன், திரேதாவில் இராமர் சீதாவின் இராஜ்யம் இருந்தது. எனவே அனைவரும் சொர்க்கவாசியாக இருந்தனர். இந்த சக்கரத்தில் 84-ன் சக்கரம் தெளி வாகிறது. மரத்தில் பூஜைக்குரியவரிலிருந்து எப்படி கீழே விழுகின்றோம், மேலும் எப்படி பூஜாரி ஆகின்றோம் என்று நிரூபணம் ஆகின்றது. இச்சமயம் அனைவரும் நாஸ்திகராக இருக்கின்றார்கள். ஏனென்றால் பாபாவை அறியவில்லை என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இப்போது அனைவரும் சுடுகாட்டில் இருக்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியும். குழந்தைகளாகிய நீங்கள் குப்தமாக இருக்கிறீர்கள். ஆங்கிலத்தில் அன்டர்கிரவுண்ட் (பூமிக்கடியில்) என்பார்கள். அங்கே அன்டர்கிரவுண்ட் எதுவும் கிடையாது. நீங்களே அன்டர் கிரவுண்ட் ஆவீர்கள். ஆனால் உங்களை யாரும் அறியவில்லை. இங்கே நேரடியாக அமரும் போது ஆனந்தம் வருகின்றது. எல்லையற்ற தந்தை பரந்தாமத்தை விட்டு வந்து இவருக்குள் பிரவேசமாகி படிக்க வைக்கின்றார். சக்கரத்தின் ரகசியத்தைப் புரிய வைக்கின்றார். மற்றபடி முழு நாளும் சவாரி செய்வது இல்லை. நான் சேவை செய்கிறேன் குழந்தைகளின் பெயரை வெளிப்படுத்துவதற்காக, நான் பிரவேச மாகிறேன் என பாபா கூறுகின்றார். எனவே குழந்தைகளே சுயதர்ஸன சக்கரதாரி ஆகுங்கள், சங்கு உடையவர் ஆகுங்கள் எனக் கூறுகிறார். நீங்கள் ஞானத்தின் சங்கை ஊத வேண்டும். சங்கு என்றாலும் முரளி என்றாலும் ஒரே விஷயம் ஆகும். அவர்கள் கிருஷ்ணரின் கையில் புல்லாங்குழலைக் காண்பிக்கிறார்கள். கிருஷ்ணரோ ரத்தினங்கள் பதித்த புல்லாங்குழலை விளையாடுவதற்காக வாசிக்கிறார். அங்கே ஞானத்தின் முரளி இல்லை. குழந்தை களாகிய நீங்கள் போன கல்பத்தில் எப்படி சத்யுகத்தில் நடித்தீரோ அவ்வாறே இப்பொழுதும் நடிப்பீர் கள் என குழந்தைகளின் புத்தியில் வைக்க வேண்டும். மற்றபடி பாபாவிடமிருந்து ஆஸ்தி அடையவேண்டும். ஆனால் குழந்தைகள் வீட்டிற்குச் சென்றதும் மறந்து போகிறார்கள். இங்கிருந்தே உறுதி செய்து கொண்டு செல்லுங்கள் என பாபா கூறுகிறார். வேலையை செய்யுங்கள். ஆனால் நினைத்துக் கொண்டேயிருங்கள். ஒரு நொடியின் கோர்ஸ் எடுங்கள். பலர் திருமணம் செய்து கொண்டு கூடப் படிக்கிறார்கள். அதுபோல நீங்களும் தொழிலில் இருந்து கொண்டே படியுங்கள். குமார், குமாரிகளுக்கு மிகவும் எளிதாகும். எனக்கு சிவபாபாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை மட்டும் புத்தியில் வையுங்கள். பிரம்மாவிற்குக் கூறவில்லை.

எப்பொழுதிலிருந்து நிச்சயம் ஏற்பட்டது என பாபா கூறுகின்றார். ஒருவேளை நிச்சயம் இருந்தால் இப்படிப்பட்ட தந்தையை ஒருபோதும் விடக்கூடாது. எதுவரை தந்தை கூறவில்லையோ. அது வரை படித்து படிக்க வையுங்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு மிகவும் குஷியிருக்க வேண்டும். ஏழைகளுக்கு லாட்டரி அடித்தால் பைத்தியமாகக் கூட ஆகிவிடுகிறார்கள். ஆனால்

இங்கேயோ குழந்தைகள் தங்களது அன்றாட தொழிலில் சென்று மறந்து விடுகிறார்கள். இவ்வளவு பெரிய லாட்டரியைக் கொடுத்திருக்கிறார், ஆனால் பைத்தியம் ஆகிவிட்டீர்கள். இது என்ன? பாபா புரிய வைக்கிறார். அதிர்ஷ்டத்தில் இல்லை. ஆகவே தான் பாக்கிய சாலியை பார்க்கவேண்டும் என்றால் இங்கே பாருங்கள்...... என கூறப்படுகிறது. கல்பத்திற்குப் பிறகு பாபா கிடைத்திருக்கிறார் என பாபாவே கூறுகின்றார். பாபா பாபா என்று கூறிக்கொண்டேயிருங்கள், அதிகாலையில் எழுந்து நினையுங்கள். அன்பான பொருள் எதுவாக இருந்தாலும் அவைகளிடம் அர்ப்பணமாகிறார்கள். நாம் கூட பாபாவிடம் அர்ப்பணம் ஆகிறோம். இந்த ஞானம் கஸ்தூரியைப் போன்றது. நாம் பாரதத்தின் படகை கரை சேர்க்கக்கூடியவர்கள் ஆவோம். சத்ய நாராயணன், அமரநாத்தின் கதை, மூன்றாவது கண் கிடைத்த கதையை சொல்லக் கூடிய உண்மையான தந்தையின் உண்மையான பிராமண குழந்தைகள் என்றால், உங்களிடம் எந்தக் குறையும் இருக்கக்கூடாது. குறை இருந்தால் உயர்ந்த பதவி பெற முடியாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

இரவு வகுப்பு **28.03.1968**

அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருந்தாலும், நடித்துக் கொண்டு இருந்தாலும் புத்தி பாபாவிடம் இருப்பதற்கு பயிற்சி செய்யுங்கள் என பாபா புரிய வைத்திருக்கிறார். இந்த பழைய உலகம் அழியப் போகிறது என அறிகிறீர்கள். இந்த உலகத்தை விட்டு நாம் நம்முடைய வீட்டிற்குச் செல்ல வேண்டும். இந்த எண்ணம் வேறு யாருடைய புத்தியிலும் இருக்காது. வேறு யாரும் இதைப் புரிந்து கொள்ள வில்லை. அவர்கள் இந்த உலகம் இன்னும் நீண்ட காலம் இருக்கும் என நினைக்கிறார்கள். நாம் இப்பொழுது நம்முடைய புதிய உலகத்திற்குச் சென்று கொண்டு இருக்கின்றோம் என குழந்தைகள் அறிகிறீர்கள். இராஜயோகத்தைக் கற்றுக் கொண்டு இருக்கிறீர்கள். சிறிது காலத்தில் நாம் சத்யுக புது உலகத்திற்கு அல்லது அமர புரிக்குச் செல்வோம். இப்போது நீங்கள் மாறிக் கொண்டு இருக்கிறீர்கள். அசுர உலகத்தில் இருந்து மாறி தெய்வீக மனிதராக மாறிக் கொண்டு இருக்கிறீர்கள். பாபா மனிதனிலிருந்து தேவதையாக்கிக் கொண்டு இருக்கின்றார். தேவதைகளுக்குள் தெய்வீக குணம் இருக்கின்றது. இவர்களும் மனிதர்கள். ஆனால் இவர்களுக்குள் தெய்வீக குணம் இல்லை. இங்கேயோ மனிதர்களுக்குள் அசுர குணங்கள் நிறைந்திருக்கின்றன. அந்த அசுர இராவண இராஜ்யம் பிறகு இருக்காது என உங்களுக்குத் தெரியும். இப்போது நாம் தெய்வீக குணங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். நம்முடைய பல பிறவிகளின் பாவங்களை யோக பலத்தால் எரித்துக் கொண்டு இருக் கிறோம். செய்கிறோமா இல்லையா என ஒவ்வொருவரும் அவரவர்களுடைய நிலையை வைத்து அறிந்து கொள்ளலாம். ஒவ்வொருவரும் தன்னை துர்கதியில் இருந்து சத்கதிக்குக் கொண்டு செல்ல வேண்டும். அதாவது சத்யுகத்திற்குச் செல்வதற்காக முயற்சி செய்ய வேண்டும். சத்யுகத்தில் விஷ்வத்தின் இராஜ்ய பதவி இருக்கின்றது. சத்யுகத்தில் ஒரே ஒரு இராஜ்ய பதவி இருக்கின்றது. இந்த லட்சுமி நாராயணன் விஷ்வத்திற்கே மகாராஜன் அல்லவா! உலகில் இருப்பவர்களுக்கு இந்த விஷயங்களைப் பற்றி

தெரியவில்லை. 1-1-1 ல் இருந்து இவர்களுடைய இராஜ்யம் ஆரம்பமாகிறது. நாம் இவ்வாறு மாறிக்கொண்டு இருக்கிறோம் என நீங்கள் அறிகிறீர்கள். பாபா தன்னை விட குழந்தைகளை உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறார். ஆகவே தான் பாபா நமஸ்காரம் செய்கிறார். ஞான சூரியன், ஞான சந்திரன், ஞான நட்சத்திரங்களான நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். பாபா முற்றிலும் சரியான அர்த்தத்துடன் நமஸ்காரம் செய்கிறார் எனப் புரிந்து கொள்கிறீர்கள். பாபா வந்து மிகவும் அளவற்ற சுகத்தைக் கொடுக்கின்றார். இந்த ஞானம் கூட மிகவும் அதிசயமாக இருக்கின்றது. உங்களுடைய இராஜ்ஜிம் கூட அதிசயமாக இருக்கின்றது. உங்களுடைய ஆத்மாவும் அதிசயமாகும். படைக்கக்கூடியவர் மற்றும் படைப்பின் முதல் இடை கடையின் முழு ஞானமும் உங்கள் புத்தியில் இருக்கிறது. உங்களை தனக்குச் சமமாக மாற்றுவதற்காக எவ்வளவு கடினமாக முயற்சி செய்ய வேண்டியிருக்கின்றது. ஒவ்வொருவருடைய அதிர்ஷ்டமும் போன கல்பத்தைப் போன்றதே, இருப்பினும் முயற்சி செய்ய வைத்துக் கொண்டு இருக்கின்றார். 8 ரத்தினங்கள் யார் ஆவார்கள் என்பதை தெரிவிக்க முடியாது. தெரிவிக்கக்கூடிய பாகம் இல்லை. இன்னும் போகப்போக நீங்கள் உங்களுடைய பாகத்தை தெரிந்து கொள்வீர்கள். யார் எவ்வளவு, எப்படி முயற்சி செய்கிறார்களோ அவ்வாறே பாக்கியத்தை உருவாக்குகிறார்கள். தந்தை வழிகாட்டக்கூடியவர். யார் எவ்வளவு அதன் படி நடக்கிறார்கள் இவரை சூட்சும உலகத்தில் பார்க்கிறார்கள். பிரஜா பிரதா பிரம்மா உடன் அமர்ந்திருக்கிறார். பிரம்மாவில் இருந்து விஷ்ணுவாக மாறுவது ஒரு நொடியின் வேலையாகும். விஷ்ணுவிலிருந்து பிரம்மா ஆவதற்கு 5000 வருடங்கள் ஆகின்றன. முற்றிலும் இது உண்மையான விஷயம் என்று புத்தியில் தோன்றுகின்றது. திருமூர்த்தியை உருவாக்குகிறார்கள் - பிரம்மா விஷ்ணு சங்கர். ஆனால் இதை யாரும் புரிந்திருக்க மாட்டார்கள். இப்போது நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு பத்மா பதம் பாக்கியசாலி குழந்தைகள். தேவதைகளின் பாதங்களில் தாமரையைக் காண்பிக்கிறார்கள் அல்லவா! பத்மாபதி என்ற பெயர் கூட புகழ் பெற்றதாக இருக்கின்றது. பத்மாபதியாக மாறினாலும் ஏழைகள் சாதாரணமாக இருக்கிறார்கள். கோடீஸ்வரர்கள் யாரும் வருவது இல்லை. 5-7 லட்சம் உடையவர்களைக் கூட சாதாரணமானவர்கள் என்பார்கள். இச்சமயம் 20-40 ஆயிரம் கூட ஒன்றும் இல்லை. பத்மாபதியாக யார் இருந்தாலும் ஒரு பிறவிக்கு மட்டுமே! சிறிது ஞானம் எடுப்பார்கள். புரிந்துகொண்டு அர்ப்பணம் செய்ய மாட்டார்கள். அனைத்தையும் அர்ப்பணம் செய்யக் கூடியவர்கள். முதலில் வந்தனர். உடனடியாக அனைவருடைய பைசாவும் பயன்பட்டது. ஏழைகளினுடையது. பயன்பட்டு விடுகிறது. பணக்காரர்களுக்கு இப்போது சேவை செய்யுங்கள் என கூறப்படுகிறது. கடினமாக உழையுங்கள். தெய்வீக குணங்களைக் கடைப் பிடியுங்கள். பாபாவும் ஏழைப்பங்காளன் என அழைக்கப்படுகிறார். பாரதம் இச்சமயம் அனைத்தையும் விட ஏழையாக இருக்கின்றது. பாரதத்தில் தான் அனைத்தையும் விட அதிகமான மக்கள் தொகை இருக்கிறது. ஏனென்றால் ஆரம்பத்தில் வந்தனர் அல்லவா? யார் சத்யுகத்தில் இருந்தனரோ அவர்களே கலியுகத்தில் வந்தனர். ஒரேயடியாக ஏழைகளாகி விட்டனர். செலவு செய்து செய்து அனைத்தையும் அழித்து விட்டனர். இப்போது மீண்டும் தேவதையாகிக் கொண்டு இருக்கின்றீர்கள் என பாபா புரிய வைக்கிறார். நிராகார கடவுள் ஒருவரே ஆவார். ஒருவருக்குத்தான் அர்ப்பணம் ஆக வேண்டும். மற்றவர்களுக்குப் புரிய வைப்பதற்காக நீங்கள் எவ்வளவு உழைக்கிறீர்கள். எவ்வளவு சித்திரங்களை உருவாக்குகிறீர்கள்.

இன்னும் போகப்போக நன்கு புரிந்து கொண்டே போவீர்கள். நாடகம் டிக் டிக் என கடந்து சென்று கொண்டேயிருக்கும். இந்த நாடகத்தின் டிக் டிக்கை நீங்கள் தான் அறிகிறீர்கள். முழு உலகத்தின் நடிப்பும் அப்படியே துல்லியமாக போன கல்பத்தைப் போல ரிப்பீட் ஆகிக் கொண்டு இருக்கின்றது. ஒவ்வொரு நொடியும் சென்று கொண்டு இருக்கின்றது. பாபா இந்த அனைத்து விஷயங்களையும் புரிய வைத்துக் கொண்டே மன்மனாபவ என்று கூறுகின்றார். பாபாவை நினையுங்கள். சிலர் தண்ணீர் அல்லது நெருப்பைக் கடந்து செல்கிறார்கள். அதனால் என்ன நன்மை. இதனால் ஆயுள் எதுவும் அதிகரிக்காது. நல்லது

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான ஆன்மீக குழந்தைகளுக்கு பாப்தாதாவினுடைய அன்பு நினைவுகள் மற்றும் குட்நைட்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. உள்ளுக்குள் எந்த குறையும் இருக்கக்கூடாது. சுயதர்சன சக்கரதாரி ஆகி சங்கொலி எழுப்ப வேண்டும். தொழிலை செய்து கொண்டே இந்த கோர்சை எடுக்க வேண்டும். (பாடத்தைப் படிக்க வேண்டும்)

2. பாபாவிற்குச் சமமாகி இரக்கமனமுடையவராகி குருடர்களுக்கு ஊன்றுகோல் ஆக வேண்டும். தாய் தந்தையைப் பின்பற்றுவதற்கு உயர்ந்த முயற்சி செய்ய வேண்டும். தனது காலில் நிற்க வேண்டும். யாரையும் ஆதாரமாக வைத்துக் கொள்ளக்கூடாது.

வரதானம் : எப்போதும் தலைவனை எதிரில் புரிந்து துணையை அனுபவம் செய்யும் இணைந்த ரூபதாரி ஆகுக

குழந்தைகள் தந்தையை அன்புடன் நினைக்கும் பொழுது துணையை அனுபவம் செய்கிறார்கள். உளப்பூர்வமாக பாபா என்றால் திலாராம் வந்து விடுகிறார். எனவே தலைவன் எதிரில் என்கிறார்கள். அழைத்த மாத்திரமே ஆஜராகிறார். அன்பெனும் விதியுடன் ஒவ்வொருவரிடமும் துணையாக நிற் கிறார். அனுபவம் செய்தவரே இதனை உணர முடியும். செய்பவர் செய்விப்பவர் எனும் போது செய்பவரும் செய்ய வைப்பவரும் இணைந்தே உள்ளனர். அப்படி இணைந்த ரூபதாரியே சதா துணையை அனுபவம் செய்வர்.

சுலோகன்: மனதை சதா ஆன்மீக ஆனந்தத்தில் வைப்பது இதுவே வாழ்க்கை வாழும் கலையாகும்.